www.Padasalai.Net www.TrbTnpsc.com

# அரையாண்டு பொதுத்தேர்வு - 2023

பன்னிரெண்டாம் வகுப்பு Reg No

T

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) யாப்பருங்கலக்காரிகை

2. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க
அ) மாவிலைக்கரி ஆ) வசம்பு இ) மணத்தக்காளியிலைச் சாறு ஈ) கடுக்காய்

3. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்
அ) நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
இ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும்

4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க
அ) பாம்பொடு உடன் உறைந்தற்று - 1 தீக்காயவார்
ஆ) செத்தார் - 2 சீர் அழிக்கும் சூது
இ) வறுமை தருவது - 3 கள் உண்பவர்
ஈ) இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4 உடம்பாடு இலாதவர்
அ) 1,2,3,4 ஆ) 2,3,4,1 இ) 4,1,3,2 ஈ) 4,3,2,1

5. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

6. தமிழர் மானிடவியல் என்ற நூலை இயற்றியவர்
அ) ஜலாலுத்தீன் ரூமி ஆ) பூமணி இ) சி.மணி ஈ) பக்தவச்சல பாரதி

7. நிலத்துடனான உறவு எதனை வலுப்படுத்துகிறது?
அ) குடும்ப உறவை ஆ) தனி மனித உறவு இ) கூட்டுறவு ஈ) சமூக உறவு

8. கல்விப்பயிற்சி என்பது ______ அ) வித்தியாரம்பம்
ஆ) வித்தியாப்பியாசம் ஆ) பெருக்கல் வாய்ப்பாடு இ) அக்ஷராப்பியாசம்

9. இந்தோ-சாரசனிக் கட்டடக்கலையில் கட்டப்பட்ட முதல் கட்டடம் எது?
அ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஆ) சேப்பாக்கம் அரண்மனை
இ) இராணி மேரி கல்லூரி ஈ) பச்சையப்பன் கல்லூரி

10. என்னைப்போல் சிவாஜி நடிப்பார், ஆனால் என்னால்தான் சிவாஜி போல் நடிக்க முடியாது என்றவர்
அ) மார்லன் பிராண்டோ ஆ) கே.வி.சைலஜா
இ) மோகன்லால் ஈ) அம்ஷன் குமார்

11. வயங்குமொழி - என்பதன் இலக்கணக்குறிப்பு அ) பண்புத்தொகை
ஆ) உம்மைத்தொகை இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

12. 'கொடியவர்' என்ற பொருளுக்கு ஏற்ற சொல்லைக் கண்டறிக
அ) உன்னலிர் ஆ) நுவன்றிலர் இ) ஓர்மின் ஈ) பாதகர்

13. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' - பயின்று வந்துள்ள தொடை நயம் யாது?
அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) முரண்

14. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர்
அ) மாணிக்கவாசகர் ஆ) திருநாவுக்கரசர் இ) திருஞானசம்பந்தர் ஈ) சுந்தரர்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. கவிஞர் சுரதாவின் படைப்புகள் யாவை?
16. 'தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர் தலமோங்கு கந்த வேளே' - தொடரை விளக்குக.
17. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?
18. குறிப்பிட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
20. உ.வே.சா. அவர்கள் பெற்ற பட்டங்கள் யாவை?
21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' - நூல் பற்றிக் குறிப்பு வரைக.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
திண்மை, திண்ணை
23. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
விண்மீன், ஒளிர், எரி, விழு
24. கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் தருக.
அ) Stamp Pad ஆ) Conviction
25. ஏற்ற வினா அமைக்க.
1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
26. பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) தாங்கிய (அல்லது) ஆ) தந்தனன்
27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.
அ) தாமரை ஆ) தலைவணம்
28. புணர்ச்சி விதி தருக.
அ) உள்ளொன்று (அல்லது) ஆ) ஒருமையுடன்
29. 'வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப' - இதில் வெளிப்படும் படிமம் எது?
30. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடராக்குக.
காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

பகுதி - III

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. 'பாண்டியனின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?
32. "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. 'மூன்றான காலம் போல் ஒன்று' - எவை? ஏன்? விளக்குக.
34. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையை திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்குக.
36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
37. வேளாண் மேலாண்மை குறித்து நீர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
38. மயிலை சீனி வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net  www.TrbTnpsc.com 

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக  3 x 4 = 12

39. நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக

(அல்லது)

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

40. இலக்கிய நயம் பாராட்டுக - மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக

வாணிகத்தும் முதன்மையை வளர்க்கின்ற
பயணத்திலே ஆங்கிலமா வேண்டும்?
மாணுயர்ந்த செந்தமிழால் வரைக என
அன்னவர்க்குச் சொல்லவேண்டும்
ஆணிவிற்போர் முதலாக அணிவிற்போர்
ஈறாக அனைவர் போக்கும்
நாணமற்ற நல்லமைதல் நற்றமிழின்
நலம் காக்கும் செயலையாமோ?  பாரதிதாசன்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக

அ) மனம் இருந்தால் மார்க்கம் உண்டு

(அல்லது)

ஆ) நுணலும் தன் வாயால் கெடும்

42. தமிழாக்கம் தருக

1) The limits of my language are the limits of my world
2) A new language is a new life
3) Do well what you have to do
4) The mills of God grind slow but sure

43. வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

(அல்லது)

பாடாண் திணை, பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக  3 x 6 = 18

44. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக

(அல்லது)

ஆ) 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் பற்றி கட்டுரை எழுதுக

45. அ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக

(அல்லது)

ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையை விவரி

46. அ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க

(அல்லது)

ஆ) சங்க கால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக

## பகுதி - V

47. அடி பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக  4 + 2 = 6

அ) 'பாதகர்' எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடல்

ஆ) 'நுண்ணிய' என தொடங்கும் திருக்குறள்

******

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com